**D.V.C. 1 of 2023** **Previous Date : 24.01.2025**

**PW1**
**ஜெயந்தி க/பெ. சர்க்கரவர்த்தி**

**20.06.2025**

**<u>2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எங்கள் திருமணம் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டு பெண் பார்த்து நடந்த திருமணம் என்றால் சரிதான். 2–ம் எதிர்மனுதாரர் எனது மாமியார் என்றாலும், 3–ம் எதிர்மனுதாரர் எனது கணவரின் உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு உடுமலைபேட்டையில் நானும் 1–எதிர்மனுதாரரும் தனிக்குடுத்தனமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். இரண்டு வாரங்கள் கழித்து தனிக்குடுத்தனம் சென்றோம். நானும் 1–ம் எதிர்மனுதாரரும் 6 வருடங்களாக பிரிந்து இருக்கிறோம் என்றால் 2015 லிருந்து பிரச்சனை வந்தது அதற்கு பிறகு அவ்வபோது 1ம் எதிர்மனுதாரர் வந்து வந்து போவார். அந்த இடைப்பட்ட 6 வருடகாலத்தில் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் கொடுமை செய்தார்கள் என்று காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். நான் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மீது எந்த புகாரும் கொடுக்காமல் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ கோரி பழனி மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் HMOP 110/2020 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

நீதிமன்ற கேள்வி : அந்த வழக்கு என்னானது
பதில் : என்னுடைய பொருள் நகை எல்லாம் தருகிறேன் என்று சொல்லி, சம்மத விவாகரத்து தருகிறேன் என்று சொல்லி கையொப்பம் வாங்கினார். ஆனால் பொருளும் தரவில்லை சம்மத விவாகரத்து தரவில்லை.

2. மேற்படி சம்மத பத்திரம் எங்கள் இருவரின் சம்மதத்தின்பேரில் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.5–ல் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மீது எந்த வித புகாரும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் என்னுடைய பொருள் மற்றும் நகைக்கு மட்டும் புகார் கொடுத்ததால் சொல்லவில்லை. எனது மாமியார் 10 வருடங்களாக மருத்துவர் ஆலோசனை படி வீட்டிலிருந்து சிகிச்சை

பெறுகிறார் என்றால் சரியல்ல. எனது மாமியாருக்கு சுகர், பிரசர், நரம்பு தளர்ச்சி பிரச்சனை இருக்கிறது என்றால் ஆமாம் எல்லோருக்கும் இருக்கிறது. 23.05.2022ம் தேதி DSP அலுவல விசாரணையில் நானும் 1–ம்எதிர்மனுதாரரும் மட்டும் ஆஜரானோம் என்றால் இல்லை எல்லோரும் வந்தார்கள். அந்த விசாரணையில் எனது பொருட்களை நீதிமன்றம் மூலம் பெற்று கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் வீட்டில் சென்று வாங்க சொன்னார்கள். எனது கணவர் வீட்டில் சென்று வாங்க சொல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 3வது எதிர்மனுதாரர் வருவாய் துறையில் அரசு வேலையில் இருக்கிறார் என்றாலும், 4வது எதிர்மனுதாரர் தொழிலாளர் மேம்பாட்டுத் துறையில் அரசு வேலையில் இருக்கிறார் என்றாலும் சரிதான். 31.05.2022ம் தேதி நான் 5ம் எதிர்மனுதாரர் வீட்டுக்கு பொருட்களை வாங்குவதற்காக சென்றேன் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 31.05.2022ம் தேதி நாங்கள் 5ம் எதிர்மனுதாரர் வீட்டுக்கு சென்றோம் என்றும் அப்போது எதிர்மனுதாரர்கள் அடித்து மிரட்டினார்கள் என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 31.05.2022ம் தேதி நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. அதற்கு பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ளதுபோல் வரதட்சனை கொடுமை செய்யவில்லை என்றாலும், தடி எடுத்து அடிக்கவில்லை என்றாலும், அசிங்கமாக பேசவில்லை என்றாலும், அசிங்கமாக பேசவில்லை என்றாலும், உண்மைக்கு புறம்பாக சொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் சொல்லியுள்ளதுபோல் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் எந்த கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் என்னை 1–ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ அறிவுரை கூறினார்கள் என்றாலும், நான் தான் புறகணித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. அவர்கள் தான் பிரச்சனை செய்தார்கள். 1–ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் என்ற காரணத்தினால் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.06.20 17:39:42 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.